**தலைப்பு 195 - கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

---

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

கைத்தொழல் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2020 யூன் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட அந்த நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

---

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென

முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய வருடத்திற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றில் பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| கட்டுநிதி சீராக்கல் கணக்கின் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 59,625,872 தொகை ஆகும். எவ்வாறெனினும், நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நி.பி. 208 இன் கீழ் ஏனைய அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் ரூபா 59,789,046.00 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், ரூபா 163,174 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ள வேறுபாடு தொடர்பில் விசாரணை மேற்கொள்ள குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதாக. |

**1.6.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்**

---------------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்பட்டுள்ளது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள் | | இணக்கமின்மைகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் 104(1), 104(3) மற்றும் 104(4) | 04 வாகன விபத்துகள் தொடர்பில் 07 நாட்களினள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆரம்ப அறிக்கை மற்றும் 03 மாதங்களினுள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழுமையான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் உரிய திகதிகளில் உரிய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்பது. | வாகன விபத்துகள் தொடர்பில் ஆரம்ப விசாரணை அறிக்கைகள் மற்றும் இறுதி விசாரணை அறிக்கை எதிர்காலத்தில் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. |
| (ஆ) | 2010 யூலை 09 ஆந் திகதி சீஏ/1/1/16/1 ஆம் இலக்க சனாதிபதி செயலக சுற்றறிக்கை. | அமைச்சின் 07 உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு சுற்றுலாவினை நிறைவு செய்து வந்த பின்னர் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை உரிய காலங்களில் சமர்ப்பித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை உரிய காலங்களில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | எதிர்காலத்தில் இவ்வாறான தாமதங்களை தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், உரிய உத்தியோகத்தர்கள் அது தொடர்பிவ் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை. | 24 வாகனங்களில் 22 வாகனங்களில் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அரசின் அனைத்து வாகனங்களும எரிபொருள் எரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தியதன் பின்னர் 12 மாத காலத்தின் பின்னர் அல்லது 25,000 | அமைச்சிற்கு சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தியதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பில் பிரதானமானதொரு பழுதுபார்த்தலின் பின்னர் அல்லது ஆகிய விடயங்களில் முதலில் நிகழும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசாதனையொன்று மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. | |
| (ஈ) | 2017 திசெம்பர் 31 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை | ஏனைய தரப்பினருக்கு சொந்தமான 4 வாகனங்கள் முறையான அங்கீகாரமின்றி பயன்படுத்தப்பட்டிருந்தது. | பதிவு உரித்து இல்லாத வாகனங்கள், பதிவு உரித்துள்ள நிறுவனத்தின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் தமது நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்வதற்கு அல்லது பதிவு உரித்துள்ள நிறுவனமொன்றிற்கு உரிய முறையில் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்ததாக. | 2 வாகனங்களை சுவீகரிப்பதற்காக உரிய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக, மற்றும் எஞ்சிய 2 வாகனங்கள் தொடர்பில் பணிகளை கூடிய விரைவில் நிறைவு செய்ய குறித்துவைத்துக்கொண்டதாக. |

## 2. நிதி மீளாயவ்வு

---------------------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

----------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது திட்டமிட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி மற்றும் கோரிய கட்டுநிதி ஆகியவற்றுக்கிடையே ரூபா 6,984 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதியில் 395 சதவீதமான அதிகரிப்பாகும். அவ்வாறு விண்ணப்பித்த கட்டுநிதி மற்றும் கிடைத்த கட்டுநிதி ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடு ரூபா 6,400 மில்லியனான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது விண்ணப்பித்த கட்டுநிதியில் 73 சதவீதமான குறைவாகும். | உரிய முறையில் கட்டுநிதி திட்டமிடப்பட வேண்டியதுடன், திட்டமிடப்பட்டவாறு கட்டுநிதி கோரப்பட வேண்டும். | சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்படும் கட்டுநிதி திட்டம் மேலதிக நிதி கிடைத்ததன் அடிப்படையில் மற்றும் மாதாந்தம் விண்ணப்பிக்கும் கட்டுநிதியின் அளவு உரிய முறையில் கிடைக்காமையின் அடிப்படையில் மீண்டும் மீண்டும் விண்ணப்பிக்கப்படுவதால் அவ்வாறு மாற்றமொன்று ஏற்படுவதாக. |

### 2.2 செலவின முகாமைத்துவம்

--------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீண்டொழும் செலவின விடயங்கள் 06 இற்குரிய தேறிய நிதியேற்பாட்டில் செலவினம் ரூபா 356,911,703 ஆகும். அதன் பிரகாரம் | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | செலவினங்களை உரிய முறையில் முகாமை செய்தல், இணைப்பு படியினை சம்பளத்திற்கு சேர்த்தல், உத்தேச பங்களிப்பு பணத்தை செலுத்துவதற்கு முன்வராமை, செயற்திட்டத்தினை |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்பு ரூபா 90,238,797 ஆனமையால் அது 11 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சனை கொண்டிருந்தது. | | நடைமுறைப்படுத்துவதிலான பிரச்சினைகள் உருவாகுதல், உரிய முறையில் திறைசேரியிடமிருந்து கட்டுநிதி கிடைக்காமை போன்ற காரணங்களால் நிதி எஞ்சியதாக. |
| (ஆ) | 09 மூலதன செலவின விடயங்களுக்குரியதாக தேறிய நிதியேற்பாட்டில் செலவினம் ரூபா 2,152,814,809 ஆகும். அதன் பிரகாரம் சேமிப்பு ரூபா 2,456,602,690 ஆனமையால் அது 15 சதவீதம் முதல் 85 சதவீதம் வரையான வீச்சனை கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் சரியான செலவின மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | தேசிய பாதீட்டு சுற்றறிக்கை 5/2019 இன் 03 ஆம் பிரிவின் பிரகாரம் முதனிலை அல்லாத செயற்திட்டங்கள் மற்றும் இதுவரையிலும் ஆரம்பிக்கப்படாது பாதீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள செயற்திட்டங்கள் மற்றும் அத்தியாவசியமற்ற தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் போன்ற விடயங்களை கொள்வனவு செய்வதற்கான செலவினம் பதிவழிக்கப்பட்டமையால் மூலதன நிதியேற்பாட்டிலான சேமிப்பொன்று இடம்பெற்றுள்ளது என்பது. |

## 2.3 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புகளை ஏற்படுத்தல்

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **பரிந்துரைகள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| 20 செலவின விடயங்களின் சேமிப்பினை விஞ்சி ரூபா 17,691,101 ஆன பொறுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருந்தது. | பொறுப்புகளின் பெறுமதி சேமிப்பினை விஞ்ச கூடாது என்பது. | அத்தியாவசியமான மற்றும் பிற்போட முடியாத சேவைகளுக்காக அவ்வாறான கடப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக. |

## 2.4 செயல்நிமித்த உப கட்டுநிதி விடுவித்தல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையில் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் விடுவிக்கப்பட்ட செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய செயற்பாட்டினை அண்மிய திகதியில் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டியதுடன், உத்தியோகத்தரால் அந்த பணி நிறைவ செய்யப்பட்டவுடன் உடனடியாக கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். அவ்வாறெனினும், அமைச்சின் இரு உத்தியோகத்தர்கள் 2 சந்தர்ப்பங்களில் பெற்றுக்கொண்ட ரூபா 65,000 தொகையான செயல்நிமித்த உப கட்டுநிதியை தீர்ப்பதற்காக 35 நாடகள் முதல் 54 நாட்கள் வரையான காலம் கடந்திருந்தது. | செயல்நிமித்த உப கட்டுநிதி உரிய செயற்பாட்டினை அண்மிய திகதியில் உத்தியோகத்தருக்கு வழங்கப்பட வேண்டியதுடன், உத்தியோகத்தரால் அந்த பணி நிறைவ செய்யப்பட்டவுடன் உடனடியாக கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டும். | முற்பணங்களை தீர்க்கும் போது பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தாமதங்கள் இடம்பெற்றுள்ளதாகவும், எதிர்காலத்தில் அந்த நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| திருத்தப்பட்ட பெறுகைகள் திட்டத்தின் பிரகாரம் மடி கணனிகளை கொள்வனவு | பெறுகை நடவடிக்கைகளை திட்டமிடும் போது | பட்டதாரிகளை இணைத்துக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் |

| | | |
|---|---|---|
| செய்வதற்காக ரூபா 3,000,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டினுள் மடி கணனிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 6,156,000 செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பெறுகைகள் திட்டத்துடன் ஒப்பிடும் போது உள்ளபடியான செலவினம் 105 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சரியான மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. | இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களிடமிருந்து கடமைகளை மிகவும் ஆக்கபூர்வமாக நிறைவேற்றும் நோக்கில் நிலவிய நிதியேற்பாடுகளை உபயோகித்து மடி கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக மற்றும் இந்த நிலைமையை முடியுமான அளவில் தவிர்த்துக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக. |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

----------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| --------------------------------------------- | --------------------- | -------------------------------------- |
| (அ) அமைச்சிற்கு சொந்தமாக காணப்பட்ட 08 வாகனங்கள் வேறு நிறுவனங்களின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்களை அமைச்சிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை அமைச்சிற்கு சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | குறித்த மோட்டார் வாகனங்களை அமைச்சிற்கு சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டவாறு உள்ளது என்பது. |
| (ஆ) அமைச்சிற்கு சொந்தமான 03 வாகனங்கள் சிஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சிற்கு மற்றும் பொருளாதார சீர்த்திருந்தங்கள் மற்றும் பொது வழங்கல் அமைச்சிற்கு விடுவிக்கப்படடடிருந்தது. | வாகனங்களை விடுவிக்கும் போது அமைச்சின நோக்கங்களுக்கு முரணாகாத வகையில் அந்த சொத்துக்களை உரிய முறையில் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | 2 மோட்டார் வாகனங்கள் அப்போதைய அரச அமைச்சரின் மற்றும் மற்றைய வானகம் முன்னாள் அமைச்சின் செயலாளரின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டதுடன், அந்த வாகனங்களை மீள அமைச்சிற்கு பெற்றுக்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டதாக. |

**3.3 முகாமைத்துவ நலிவுகள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வெளிநாட்டு செயலமர்வுகளுக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்யும் குழுவொன்று 2019 ஆம் ஆண்டின் போது நியமிக்கப்பட்டிருந்த போதிலும், 06 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு பயணங்களுக்காக உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல் மேற்படி குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு பயிற்சிகள் / செயலமர்வுகள் / வியாபார கண்காட்சிகள் மற்றும் மாநாடுகளுக்கு அமைச்சின் உத்தியோகத்தர்களை தெரிவு செய்தல் குறித்த குழுவின் ஊடாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது. | எதிர்காலத்தில் அவ்வாறான நிலைமையொன்றினை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாக. |
| (ஆ) மில்லனிய ஏற்றுமதி பெதியிடல் வலயத்தில் நிர்மாணங்களுக்காக காணிகளை கைப்பற்றுவதற்கு முன்னர் மற்றும் எழுத்துமூல உடன்படிக்கைகளை கைச்சாத்திடாது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 1,988,918,307 தொகை செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், ஏற்றுமதி பொதியிடல் வலயத்தினை நிர்மாணிப்பதற்காக சுவீகரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பில் வெளிவாரி தரப்பினரால் எடுக்கப்பட்ட நீதிமன்ற | காணிகளை சுவீகரித்ததன் பின்னர் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டும் என்பது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை காரணமாக செயற்திட்டத்தின் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. | | |
| (இ) | பிங்கிரிய ஏற்றுமதி பெதியிடல் வலயத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக எழுத்துமூல உடன்படிக்கைகளை கைச்சாத்திடாது உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக வீதி அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய நீர் வளங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபை மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களுக்கு மீளாய்வாண்டினுள் ரூபா 499,333,030 தொகை அமைச்சினால் செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகளை மேற்கொள்ள முன்னர் எழுத்துமூல உடன்படிக்கைகளில் கைச்சாத்திட வேண்டும் என்பது. | வரைபு உடன்படிக்கைகள் ஒவ்வொரு நிறுவனங்களிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக. |

**4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல்**

--------------------------------------------------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்துகொள்ளல் இன் கீழ் அமைச்சின் செயல்நடவடிக்கைத் திட்டத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள Provide Infrastructure Facilities for Industrial Park in Millaniya, Establish Industrial Zone in Bingiriya, Provide Infrastructure facilities for Industrial Zone in Wagawatta மற்றும் Multinational Corporate Outreach Program for Electronics Manufacturing Industry ஆகிய 4 நிகழ்ச்சித்திட்டங்களின் உத்தேச செயன்முன்னேற்றம் 50 சதவீதத்தினை விட குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | உத்தேசிக்கப்பட்ட செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட செயன்முன்னேற்றத்தினை அடைந்துகொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | நீதிமன்ற நடவடிக்கைகள், செயற்திட்ட பணிகளுடன் தொடர்புடையதாக இடம்பெற்ற எதிர்பாரத தாமதங்கள், உரிய அங்கீகாரங்களை வழங்க நீண்ட காலம் எடுக்கின்றமை, எதிர்பார்த்தவாறு நிதி திறைசேரியிலிருந்து கிடைக்காமை, உத்தேச காணிகளை அந்த பணிகளுக்காக விடுவிப்பதில் ஏற்பட்ட தாமதங்கள், மக்கள் எதிர்ப்பு, பாதகமான காலநிலை, அமைச்சரவையின் தீர்மானம் தொடர்பில் |

| | | |
|---|---|---|
| | | நிதி அமைச்சு வழங்கியிருந்த தீர்ப்புகளில் காணப்பட்ட நிச்சயமற்ற தன்மை ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் குறித்த செயற்திட்டங்களின் உத்தேச பெறுபேற்றினை அடைந்துகொள்ள முடியாதுள்ளதாக. |

**5. மனிதவள முகாமைத்துவம்**

---------------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதவியணி 236 ஆக உள்ளதுடன், வெற்றிடங்களின் எண்ணிக்கை 70 ஆகும். | நிறுவனத்தின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது. | ஒட்டுமொத்தமாக நோக்குமிடத்து பட்டதாரி பயிலுநர்களாக 64 பேர் அமைச்சின் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்தி சபையில் மற்றும் அதனுடன் இணைந்த பிரதேச அலுவலகங்களில், மாவட்ட செயலகங்களில் மற்றும் பிரதேச செயலகங்களில் கடமைகளை நிறைவேற்றுகின்றமையால் வெற்றிடங்களை அவர்கள் உரிய பதவிகளில் நிரந்தரமாக்கப்பட்டதன் பின்னரே நிரப்ப முடியும் என்பது. |
| (ஆ) ஆண்டின் பயிற்சி சட்டகத்தின் பிரகாரம், இரண்டாம் தரத்திலான உத்தியோகத்தர்களுக்காக நடாத்தப்பட வேண்டிய 03 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருக்கவில்லை. அவ்வாறே, கனிஷ்ட மட்டங்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக திட்டமிடப்பட்ட 06 பயிற்சி | ஆண்டின் பயிற்சி சட்டகத்தின் பிரகாரம் உரிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களக்கா க உத்தியோகத்தர்களை பங்குபற்றச்செய்ய வேண்டும் என்பது, மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிடும் போது ஒவ்வொரு தரங்களிலும் உள்ள | எதிர்காலத்தில் அந்த அவதானிப்புகளின் பிரகாரம் செயற்படுவதற்கு குறித்து வைத்துக்கொள்ளப்பட்டதாக , மற்றும் அது தொடர்பில் கவனம் செலுத்துமாறு உத்தியோகதர்களுக்க அறிவுறுத்தியதாகவும். |

| | | | |
|---|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டங்களில் அவர்களின் பணிகளுடன் நேரடியான தொடர்பொன்று காணப்படவில்லை. | உத்தியோகத்தர்களின் சேவை தேவைப்பாடுகளக்கமைய பயிற்சி கால அட்டவணை தயாரிக்கப்பட வேண்டும் என்பது. | |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியின் அனைத்து அங்கத்தவருக்கும் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சியொன்று மனிதவள அபிவிருத்தி திட்டத்தினுள் சான்றுபடுத்த வேண்டிய போதிலும், மீளாய்வாண்டினுள் எவ்வித பயிற்சியையும் பெற்றிராத உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 159 ஆகும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியின் அனைத்து அங்கத்தவருக்கும் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சியொன்று மனிதவள அபிவிருத்தி திட்டத்தினுள் சான்றுபடுத்த வேண்டும். | ஒவ்வொரு உத்தியோகத்தர்களினதும் கடமை கையளிப்பின் அடிப்படையில் மற்றும் அந்தந்த உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் அடிப்படையில் அரச பயற்சி நியுவனத்தின் மூலம் வழங்கப்படும் பயற்சி சந்தர்ப்பங்களுக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், அனைத்து உத்தியோகத்தர்களுக்காகவும் பிரிதொரு பயிற்சி நிகழ்ச்சித்திட்டமென்று தயாரிக்கப்பட்டிருந்தது என்பதும். |
| (ஈ) | ஆண்டின் இயலளவு அபிவிருத்திக்கான ரூபா 400,000 ஆன நிதியேற்பாட்டில் ரூபா 209,000 தொகை செலவிடப்பட்டு 236 உத்தியோகத்தர்களில் 17 உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் பயிற்சிகள் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனத்தின் பதவியணியின் அனைத்து அங்கத்தவருக்கும் ஆண்டொன்றிற்கு ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சியொன்று மனிதவள அபிவிருத்தி திட்டத்தினுள் சான்றுபடுத்த வேண்டும் என்பது. | பதில் வழங்கப்பட்டிருக்கவில்லை. |